Wondershare
PDFelement

மாதிரி வினாத்தாள் – 1 / Model Question Paper - 1

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

HIGHER SECONDARY – SECOND YEAR

PART - III

கணினி அறிவியல் / COMPUTER SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil and English Version)

(New Syllabus)

[கால அளவு: 2.30 மணி நேரம்]

[Time Allowed: 2.30 Hours] [Maximum Marks: 70]

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளாத என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions: (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

Wondershare PDFelement

பகுதி – I / PART – I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 × 1 = 15

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) All questions are compulsory.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. தன்னைத்தானே அழைத்துக்கொள்ளும் செயற்கூறு வரையறுத்தல்

(அ) Pure செயற்கூறு (ஆ) Impure செயற்கூறு

(இ) சாதாரண செயற்கூறு (ஈ) தன்னைத்தானே அழைக்கும் செயற்கூறு

A function definition which call itself:

(A) Pure function (B) Impure function

(C) Normal function (D) Recursive function

Wondershare PDFelement

2. ADT என்பதன் விரிவாக்கம்:

(அ) Abstract Data Tuple (ஆ) All Data Template

(இ) Abstract Data Type (ஈ) All Data Type

Expansion of ADT:

(A) Abstract Data Tuple (B) All Data Template

(C) Abstract Data Type (D) All Data Type

3. மற்றொரு செயற்கூறு வரையறையை தன்னுள் கொண்ட ஒரு வெளி செயற்கூறினுள் அறிவிக்கப்படும் மாறி:

(அ) உள்ளமை (ஆ) முழுதளவிய (இ) அடைக்கப்பட்ட (ஈ) உள்ளிணைந்த

A variable which is declared inside a function which contains another function definition:

(A) Local (B) Global (C) Enclosed (D) Built-in

4. குமிழி வரிசையாக்கத்தின் மிகச் சிறந்த நிலையில் அதன் நேர சிக்கல்தன்மை

(அ) θ (n) (ஆ) θ (n log n) (இ) θ (n2) (ஈ) θ (n(log n) 2)

Time complexity of bubble sort in best case is

(A) θ (n) (B) θ (n log n) (C) θ (n2) (D) θ (n(log n) 2)

5. எந்த செயற்குறி ஒப்பீட்டு செயற்குறி என்றும் அழைக்கப்படுகிறது?

(அ) எண்கணித (ஆ) உறவுநிலை (இ) தருக்க (ஈ) மதிப்பிருத்தல்

Which operator is also called as Comparative operator?

(A) Arithmetic (B) Relational (C) Logical (D) Assignment

Wondershare PDFelement

6. பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

```
for i in range(1,10,2):
        print(i, end=' ')
```

(அ) 1 3 5 7 9 (ஆ) 1 2 4 6 8 (இ) 2 4 6 8 10 (ஈ) 1 3 5 7 10

What will be the output of the following python code?

```
for i in range(1,10,2):
        print(i, end=' ')
```

(A) 1 3 5 7 9 (B) 1 2 4 6 8 (C) 2 4 6 8 10 (D) 1 3 5 7 10

7. எந்த செயற்கூறு அனாமத்து செயற்கூறு என்று அழைக்கப்படுகிறது?

(அ) லாம்டா (ஆ) தன்னைத்தானே

(இ) செயற்கூறு (ஈ) வரையறை

Which function is called anonymous function?

(A) Lambda (B) Recursion (C) Function (D) define

Wondershare PDFelement

8. பின்வருவனவற்றுள் எது துண்டாடும் செயற்குறி (slicing operator)?
(அ) { } (ஆ) [ ] (இ) < > (ஈ) ( )

Which of the following is the slicing operator?
(A) { } (B) [ ] (C) < > (D) ( )

9. List=[17,23,41,10] எனில், List.append(32)ன் வெளியீடு என்ன?
(அ) [32,17,23,41,10] (ஆ) [17,23,41,10,32]
(இ) [10,17,23,32,41] (ஈ) [41,32,23,17,10]
If List=[17,23,41,10] then List.append(32) will result
(A) [32,17,23,41,10] (B) [17,23,41,10,32]
(C) [10,17,23,32,41] (D) [41,32,23,17,10]

10. பின்வரும் எந்த வழிமுறை அழிப்பியாக பயன்படுத்தப்படுகிறது?
(அ) __init__( ) (ஆ) __dest__( ) (இ) __rem__( ) (ஈ) __del__( )
Which of the following method is used as destructor?
(A) __init__( ) (B) __dest__( ) (C) __rem__( ) (D) __del__( )

11. தரவு அட்டவணையில், ஒரு நெடுவரிசை இவ்வாறு அழைக்கப்படுகிறது:
(அ) பண்புக்கூறு ஆ) உறவுகள் (இ) பதிவு (ஈ) தரவு
A column in database table is known as an:
(A) Attribute (B) Relation (C) Tuple (D) Data

12. பொருந்தா ஒன்றைத் தேர்ந்தெடு:
(அ) Commit (ஆ) Roll back (இ) Save point (ஈ) Revoke
Pick odd one:
(A) Commit (B) Roll back (C) Save point (D) Revoke

13. பின்வருவனவற்றுள் எது தரவுகளை, டிக்ஷ்னரியில் இணைக்கும் பொருளை உருவாக்கும்
(அ) listreader( ) (ஆ) reader( ) (இ) tuplereader( ) (ஈ) DicReader( )
Which of the following creates an object which maps data to a dictionary?
(A) listreader( ) (B) reader( ) (C) tuplereader( ) (D) DicReader( )

14. பின்வருவனவற்றுள் எந்த சிறப்பு மாறி, தானன்மைவாக ஒரு கோப்பின் பெயரை சேமிக்கும்?
(அ) __name__ (ஆ) __init__ (இ) __del__ (ஈ) __def__

Which of the following is the special variable which by default stores the name of the file?

(A) __name__ (B) __init__ (C) __del__ (D) __def_

15. பைத்தானில், ஒரு சில நிரல் வரிகளை கொண்டே விளக்கப் படங்களை உருவாக்கப் பயன்படும் பிரபலமான தரவு காட்சிபடுத்தும் பயன்பாடு:

(அ) Matplotlib (ஆ) Infographics

(இ) Data visualization (ஈ) pip

The most popular data visualization library which allows creating charts in few lines of code in Python.

(A) Matplotlib (B) Infographics (C) Data visualization (D) pip

## பகுதி – II / PART – II

ஏதேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 2 = 12

Answer **any six** questions. Question No. 24 is compulsory.

16. துணை நிரல் என்றால் என்ன?
What is Subroutine?

17. பைத்தானில் சிறப்புச் சொற்கள் என்பன யாவை?
What are keywords in Python?

18. பைத்தானில் பயனர் வரையறுக்கும் செயற்கூறுகளை உருவாக்குவதற்கான கட்டளை அமைப்பை எழுதுக.
Write the syntax of creating User Defined Function in Python.

19. SQLite என்றால் என்ன?
What is SQLite?

20. பைத்தானில் Dictionary உருவாக்குவதற்கான கட்டளை அமைப்பை எழுதுக.
Write the syntax of creating dictionary in Python.

21. பைத்தானில் இனக்குழு என்றால் என்ன?
What is class in Python?

22. ஏதேனும் நான்கு DDL கட்டளைகளை பட்டியலிடுக.
List any four DDL commands.

23. (அ) SWIG (ஆ) MinGW - விரிவாக்கத்தை எழுதுக.
Write the expansion of (a) SWIG (b) MinGW

Wondershare PDFelement

24. பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

```
Str1 = "Madurai"
print(Str1*3)
```

What will be the output of the following Python code?

```
Str1 = "Madurai"
print(Str1*3)
```

## பகுதி – III / PART – III

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 3 = 18

Answer any six questions. Question No. 33 is compulsory.

25. அணுகல் கட்டுப்பாடு எதற்கு தேவைப்படுகிறது?

Why access control is required?

26. பைத்தானின் மும்ம செயற்குறியை எடுத்துக்காட்டுடன் விவரி.

Explain ternary operator in Python with an example.

27. பைத்தான் for மடக்கில் range( ) செயற்கூறின் பங்களிப்பு என்ன?

What is the role of range( ) in for loop of Python?

28. கொடுக்கப்பட்டுள்ளவைகளுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) capitalize( ) (ஆ) swapcase( )

Write a short note about the following.

(a) capitalize( ) (b) swapcase( )

29. தரவுக் காட்சிபடுத்தலின் ஏதேனும் மூன்று பயன்களை எழுதுக.

Write any three uses of data visualization

30. இனக்குழு உறுப்புகள் என்பன யாவை? அவற்றை எவ்வாறு வரையறுப்பாய்?

What are class members? How do you define it?

31. SQLன் Delete, Truncate மற்றும் Drop கட்டளைகளை ஒப்பிடுக.

Compare Delete, Truncate and Drop in SQL.

32. பைத்தானின் open( ) செயற்கூறு பற்றி குறிப்பு எழுதுக.

Write a note on open( ) function of Python

33. பின்வரும் பைத்தான் நிரலுக்கான இயக்க அட்டவணை எழுதுக.

```
Marks=[10, 20, 30, 40, 50]
i = 0
sum = 0
while i < 4:
        sum+=Marks[i]
        i+=1
```

Write execution table for the following Python code.

Wondershare PDFelement

```
Marks=[10, 20, 30, 40, 50]
i = 0
sum = 0
while i < 4:
        sum+=Marks[i]
        i+=1
```

## பகுதி – IV / PART – IV

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 × 5 = 25

Answer all the questions.

34. LEGB விதிகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

வரிசைமுறை தேடல் பற்றி விளக்குக.

Explain LEGB rule with example

(OR)

Discuss about Linear Search Algorithm

35. பைத்தானின் பல்வேறு செயற்குறிகளை பற்றி விளக்குக.

(அல்லது)

பைத்தானின் தாவல் கூற்றுகளை (Jump statements) விரிவாக விளக்குக.

Explain the different operators in Python

(OR)

Explain briefly about Jump statements in Python

Wondershare PDFelement

36. பைத்தானில் உள்ள set செயற்பாடுகளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

```
class Sample:
        num=0
        def __init__(self, var):
                Sample.num+=1
                self.var=var
                print("The object value is = ", var)
                print("The count of object created = ", Sample.num)
S1=Sample(15)
S2=Sample(35)
```

Wondershare PDFelement

S3=Sample(45)

Explain the set operations supported by Python with suitable example

(OR)

Find the output of the following Python code

```
class Sample:
        num=0
        def __init__(self, var):
                Sample.num+=1
                self.var=var
                print("The object value is = ", var)
                print("The count of object created = ", Sample.num)
S1=Sample(15)
S2=Sample(35)
S3=Sample(45)
```

37. தரவுத்தளத்தில் பயன்படும் உறவு நிலைகளின் வகைகளை விளக்குக.

(அல்லது)

தரவுத்தள TCL கட்டளைகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Explain the types of relationships used in a database.

(OR)

Explain about the TCL commands with suitable examples

Wondershare PDFelement

38. fetchmany( ) பயன்படுத்தி பின்வரும் அட்டவணையிலுள்ள அனைத்து பதிவுகளையும் திரையில் காட்டும் பைத்தான் நிரலை எழுதுக.

| Reg No | Name | Marks |
|---|---|---|
| 3001 | Chithirai | 353 |
| 3002 | Vaigasi | 411 |
| 3003 | Aani | 374 |
| 3004 | Aadi | 289 |
| 3005 | Aavani | 507 |
| 3006 | Purattasi | 521 |

(அல்லது)

கீழே கொடுக்கப்பட்டுள்ள வட்ட வரைபடத்தை வரைவதற்கான பைத்தான் நிரல் ஒன்றை எழுதுக.

Write a Python code to display all the records of the following table using fetchmany( ).

| Reg No | Name | Marks |
|---|---|---|
| 3001 | Chithirai | 353 |
| 3002 | Vaigasi | 411 |
| 3003 | Aani | 374 |
| 3004 | Aadi | 289 |
| 3005 | Aavani | 507 |
| 3006 | Purattasi | 521 |

(OR)

Write a Python Script to display the following Pie chart

Wondershare PDFelement

Wondershare PDFelement

மாதிரி வினாத்தாள் – 2 / Model Question Paper - 2

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# HIGHER SECONDARY – SECOND YEAR

## PART - III

## கணினி அறிவியல் / COMPUTER SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil and English Version)

(New Syllabus)

[கால அளவு: 2.30 மணி நேரம்]

[Time Allowed: 2.30 Hours] [Maximum Marks: 70]

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளாத என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions: (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

Wondershare PDFelement

### பகுதி – I / PART – I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 × 1 = 15

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) All questions are compulsory.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. ஒரு செயற்கூறு வரையறுப்பில் உள்ள மாறி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) துணை நிரல்கள் (Subroutines) (ஆ) செயற்கூறு (Function)

(இ) வரையறை (Definition) (ஈ) செயலுருபுக்கள் (Parameters)

The variables in a function definition are called as

(A) Subroutines (B) Function

(C) Definition (D) Parameters

Wondershare PDFelement

2. உருவமைப்பு அறியப்படாத தரவு வகை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
(அ) உள்ளிணைந்த தரவினம் (Built in datatype)
(ஆ) தருவிக்கப்பட்ட தரவினம் (Derived datatype)
(இ) நிலையான தரவினம் (Concrete datatype)
(ஈ) மறை தரவினம் (Abstract datatype)

The data type whose representation is unknown is called.
(A) Built in datatype (B) Derived datatype
(C) Concrete datatype (D) Abstract datatype

3. பின்வருவனவற்றுள் எது நிரலாக்க மொழியில் மாறிகளுக்கும், பொருள்களுக்கும் இணைப்பை (Map) ஏற்படுத்தப் பயன்படுகிறது.
(அ) :: (ஆ) := (இ) = (ஈ) ==

Which of the following is used in programming languages to map the variable and object?
(அ) :: (ஆ) := (இ) = (D) ==

4. கொடுக்கப்பட்ட ஒரு சிக்கலை தீர்ப்பதற்கான படிப்படியான செயல்முறைகள்
(அ) நிரல் (Program) (ஆ) போலிக்குறிமுறை (Pseudo Code)
(இ) பாய்வுப் படம் (Flow chart) (இ) செயல்முறை (Algorithm)

Step by step procedure for solving a given problem.
(A) Program (B) Pseudo Code
(C) Flowchart (D) Algorithm

5. பின்வரும் குறிமுறையில், Xன் மதிப்பு என்ன?
```
A, B = 10, 3
X = A if (A/B==3) else B
print(X)
```
(அ) 3 (ஆ) 10 (இ) True (ஈ) False

What will be the value of X from the following code snippet?
```
A, B = 10, 3
X = A if (A/B==3) else B
print(X)
```
(A) 3 (B) 10 (C) True (D) False

6. கொடுக்கப்பட்டவைகளில் எது தத்தல் (Jump) கூற்று அல்ல?
(அ) for (ஆ) goto (இ) continue (ஈ) break

Which is not a jump statement?
(A) for (B) goto (C) continue (D) break

Wondershare PDFelement

7. பின்வரும் சிறப்பு குறியீடுகளில் எது மாறும் நீள செயலுருபுக்களை வரையறுக்கப் பயன்படுகிறது?

(அ) & (ஆ) $ (இ) * (ஈ) #

Which of the following special character is used to define variable length arguments?

(A) & (B) $ (C) * (D) #

8. மூன்றாம் அளபுரு (Stride) என்பது என்ன?

(அ) துண்டாடும் செயற்பாட்டின் சுட்டெண் மதிப்பு

(ஆ) துண்டாடும் செயற்பாட்டின் முதல் அளபுருவாகும்

(இ) துண்டாடும் செயற்பாட்டின் இரண்டாம் அளபுருவாகும்

(ஈ) துண்டாடும் செயற்பாட்டின் மூன்றாம் அளபுருவாகும்

What is stride?

(A) index value of slice operation

(B) first argument of slice operation

(C) second argument of slice operation

(D) third argument of slice operation

9. setA={3,6,9}, setB={1,3,9} எனில், print(setA|setB) என்ற குறிமுறையின் வெளியீடு என்ன?

(அ) {3,6,9,1,3,9} (ஆ) {3,9} (இ) {1} (ஈ) {1,3,6,9}

Let setA={3,6,9}, setB={1,3,9}. What will be the result of the following snippet?

print(setA|setB)

(A) {3,6,9,1,3,9} (B) {3,9} (C) {1} (D) {1,3,6,9}

Wondershare PDFelement

10. பின்வருவனவற்றுள் எது private இனக்குழு மாறி?

(அ) __num (ஆ) ##num (இ) $$num (ஈ) &&num

Which of the following is the private class variable?

(A) __num (B) ##num (C) $$num (D) &&num

11. பின்வரும் எந்த குறியீடு SELECT கூற்றில் பயன்படுகிறது?

(அ) σ (ஆ) Π (இ) X (ஈ) Ω

What symbol is used for SELECT statement?

(A) σ (B) Π (C) X (D) Ω

12. பொருந்தா ஒன்றை தேர்ந்தெடு

(அ) INSERT (ஆ) DELETE (இ) UPDATE (ஈ) TRANCATE

Pick odd one:

(A) INSERT (B) DELETE (D) UPDATE (D) TRANCATE

13. எக்ஸெல் கோப்பின் நீட்சி:

(அ) exl (ஆ) xls (இ) cel (ஈ) Ecl

The file extension of Excel:

(A) exl (B) xls (C) cel (D) Ecl

14. எந்த வழிமுறை ஒரு அட்டவணையிலுள்ள தரவுகளை SQL கட்டளையின் மூலம் பெற பயன்படுகிறது?

(அ) get (ஆ) select (இ) execute (ஈ) Query

Which method uses the SQL command to get all the data from the table?

(A) get (B) select (C) execute (D) Query

15. Matplotlibல் வட்டவிளக்கப்படம் (pie chart) வரைவதற்கான செயற்கூறு:

(அ) plt.bar( ) (ஆ) pie.plt( ) (இ) bar.plt( ) (ஈ) plt.pie( )

The function to make a pie chart with Matplotlib:

(A) plt.bar( ) (B) pie.plt( ) (C) bar.plt( ) (D) plt.pie( )

## பகுதி – II / PART – II

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 2 = 12

Answer any six questions. Question No. 24 is compulsory.

16. ஆக்கி மற்றும் செலக்டர்கள் வேறுபடுத்துக.

Differentiate constructors and selectors.

17. கட்டுப்பாட்டு அமைப்பு வரையறு

Define control structure.

18. லாம்டா செயற்கூறின் பயன் என்ன?

What is the use of lambda function?

19. பைத்தான் உறுப்பு செயற்குறிகள் யாவை?

What are membership operators in Python?

20. Matplotlib என்றால் என்ன?

What is Matplotlib?

21. அழிப்பியின் பயன் என்ன?

What is the purpose of Destructor?

Wondershare PDFelement

22. தரவுத்தள ER மாதிரியில் தரவுத்தள அமைப்புகளை குறிப்பிடும் வடிவங்க

What are the shapes to represent database structures in ER model?

23. பைத்தானை பயன்படுத்தி, CSV கோப்பை படிக்கும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக.

Mention the two ways to read a CSV file using Python.

24. பின்வரும் குறிமுறையின் வெளியீடு என்ன?

What will be the output of the following snippet?

```
Mydict={chr(x):x for x in range(97,102)}
print(Mydict)
```

## பகுதி – III / PART – III

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 3 = 18

Answer any six questions. Question No. 33 is compulsory.

25. ஒரு நெறிமுறையின் சிக்கற்பாட்டை அளவிடும் காரணிகளை பற்றி குறிப்பு எழுதுக.

Write a short note on the factors of measuring complexity of an algorithm.

Wondershare PDFelement

26. பைத்தானில் குறிப்பெயர்களை உருவாக்குவதற்கான விதிமுறைகள் யாவை?

What are the rules to be followed while creating an identifier in Python?

27. பைத்தான் while மடக்கை விளக்கும் பாய்வுப்படம் ஒன்றை வரைக.

Draw a flow chart to explain while loop.

28. ceil( ) மற்றும் floor( ) செயற்கூறுகளை வேறுபடுத்துக.

Differentiate ceil( ) and floor( ) function?

29. range( ) செயற்கூறின் கட்டளையமைப்பை எழுதி விளக்குக.

Write and explain the syntax of range( ).

30. write மற்றும் append முறைமைகளிடையே உள்ள வேறுபாடு என்ன?

What is the difference between the write mode and append mode?

31. Select மற்றும் Project கட்டளைகளின் வேறுபாடு என்ன?

What is the difference between Select and Project command?

Wondershare PDFelement

32. எதேனும் மூன்று தரவு வரையறுத்தல் மொழி (DDL) கட்டளைகளை பற்றி சிறு
எழுதுக.

Write short note on any three DDL commands.

33. இரண்டு private மாறிகளுடன், செயற்கூற்றைப் பயன்படுத்தி கூட்டுத்தொகையை அச்சிடும் இனக்குழு ஒன்றை எழுதுக.

Write a class with two private class variables and print the sum using a method.

## பகுதி – IV / PART – IV

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 × 5 = 25

Answer all the questions.

34. 1. அளபுருக்கள் என்பன யாவை?

2. குறிப்பு வரைக - (அ) தரவு வகையில்லா அளபுருக்கள்

(ஆ) தரவு வகையுடன் கூடிய அளபுருக்கள்

1. What are called Parameters

2. Write a note on - (i) Parameter without Type

(ii) Parameter with Type

(அல்லது / OR)

தரவு அருவமாக்கத்தை எவ்வாறு செயல்படுத்துவாய்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

How will you facilitate data abstraction? Explain it with suitable example

35. லாம்டா செயற்கூற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Explain about Lambda function with suitable example.

(அல்லது / OR)

பைத்தானின் சர செற்குறிகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Explain about string operators in python with suitable example.

36. பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

What will be the output of the following Python program?

```
A={x*3 for x in range (1,6)}
B={y**2 for y in range (1,10,2)}
print(A)
print(B)
print(A|B)
print(A-B)
print(A&B)
print(A^B)
```

Wondershare PDFelement

Wondershare PDFelement

(அல்லது / OR)

பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

What will be the output of the following Python code

```
class String:
    def __init__(self):
        self.uppercase=0
        self.lowercase=0
        self.vowels=0
        self.consonants=0
        self.spaces=0
        self.string=""
    def getstr(self):
        self.string= "Welcome to Puducherry"
    def count_upper(self):
        for ch in self.string:
            if (ch.isupper()):
                self.uppercase+=1
    def count_lower(self):
        for ch in self.string:
            if (ch.islower()):
                self.lowercase+=1
    def count_vowels(self):
        for ch in self.string:
            if (ch in ('A', 'a', 'e', 'E', 'i', 'I', 'o', 'O', 'u', 'U')):
                self.vowels+=1
    def count_consonants(self):
        for ch in self.string:
            if (ch not in ('A', 'a', 'e', 'E', 'i', 'I', 'o', 'O', 'u', 'U',' ')):
                self.consonants+=1
    def count_space(self):
        for ch in self.string:
            if (ch==" "):
                self.spaces+=1
    def execute(self):
        self.count_upper()
        self.count_lower()
        self.count_vowels()
        self.count_consonants()
        self.count_space()
    def display(self):
        print("The given string contains...")
        print("%d Uppercase letters"%self.uppercase)
```

Wondershare PDFelement

```
        print("%d Lowercase letters"%self.lowercase)
        print("%d Vowels"%self.vowels)
        print("%d Consonants"%self.consonants)
        print("%d Spaces"%self.spaces)
S = String()
S.getstr()
S.execute()
S.display()
```

37. உறவுநிலை இயற்கணித செயற்குறிகளில் கீழ்காணும் செயற்குறிகளை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(1) Union (∪)

(2) Intersection (∩)

Explain the following operators in Relational algebra with suitable examples.

(1) Union (∪)

(2) Intersection (∩)

(அல்லது / OR)

கொடுக்கப்பட்டுள்ள employee அட்டவணையை பயன்படுத்தி, வினா (1) முதல் (5) வரை கொடுக்கப்பட்டவைகளுக்கு SQL கட்டளை எழுதுக.

| EMP CODE | NAME | DESIG | PAY | ALLOWANCE |
|---|---|---|---|---|
| S1001 | Hariharan | Supervisor | 29000 | 12000 |
| P1002 | Shaji | Operator | 10000 | 5500 |
| P1003 | Prasad | Operator | 12000 | 6500 |
| C1004 | Manjima | Clerk | 8000 | 4500 |
| M1005 | Ratheesh | Mechanic | 20000 | 7000 |

(1) சம்பளத்தின் (Pay) இறங்குவரிசையில், அனைத்து தகவல்களையும் காட்டுவதற்கு.

(2) படிகள் (Allowance) 5000 முதல் 7000 வரை பெறும் அனைத்து அலுவலர்களின் தகவல்களை காட்டுவதற்கு.

(3) பதவி (Desig) mechanic என உள்ள அனைத்து அலுவலர்களின் தகவல்களை நீக்க.

(4) ஒரு புதிய வரிசை தரவை உள்ளிட.

(5) பதவி operators என உள்ள அனைத்து அலுவலர்களின் தகவல்களை காட்டுவதற்கு.

Consider the following employee table. Write SQL commands for the (1) to (5).

| EMP CODE | NAME | DESIG | PAY | ALLO WANCE |
|---|---|---|---|---|
| S1001 | Hariharan | Supervisor | 29000 | 12000 |
| P1002 | Shaji | Operator | 10000 | 5500 |
| P1003 | Prasad | Operator | 12000 | 6500 |
| C1004 | Manjima | Clerk | 8000 | 4500 |
| M1005 | Ratheesh | Mechanic | 20000 | 7000 |

(1) To display the details of all employees in descending order of pay.
(2) To display all employees whose allowance is between 5000 and 7000.
(3) To remove the employees who are mechanic.
(4) To add a new row.
(5) To display the details of all employees who are operators.

38. எக்செல் மற்றும் CSV கோப்புகள் வேறுபடுத்துக.
Differentiate Excel file and CSV file.

(அல்லது / OR)

getopt() செயற்கூற்றின் கட்டளை அமைப்பை எழுதி, அதன் அளபுருக்களையும் அவை திருப்பும் மதிப்புகளையும் விளக்குக.

Write the syntax for getopt() and explain its arguments and return values

****

Wondershare PDFelement

Wondershare PDFelement

# மாதிரி வினாத்தாள் – 3 / Model Question Paper - 3

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## HIGHER SECONDARY – SECOND YEAR

## PART - III

## கணினி அறிவியல் / COMPUTER SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil and English Version)

(New Syllabus)

[கால அளவு: 2.30 மணி நேரம்]

[Time Allowed: 2.30 Hours] [Maximum Marks: 70]

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளாத என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions: (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

Wondershare PDFelement

### பகுதி – I / PART – I

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 × 1 = 15

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) All questions are compulsory.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. ஒரே மாதிரியான அதே அளபுருக்களை செயற்கூறுவிற்கு அனுப்பினால் சரியான விடையைத் தரும் செயற்கூறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) Impure செயற்கூறு (ஆ) Partial செயற்கூறு

(இ) Dynamic செயற்கூறு (ஈ) Pure செயற்கூறு

The function which will give exact result then same arguments are passed are called:

(A) Impure function (B) Partial function

(C) Dynamic function (D) Pure function

Wondershare PDFelement

2. எவை நூலக கோப்புகள் நிரலில் செயல்பட தொடங்கியவுடன் இறக்கப்படும்?
(அ) உள்ளிணைந்த வரையெல்லை செயற்கூறுகள்
(ஆ) அடைக்கப்பட்ட வரையெல்லை செயற்கூறுகள்
(இ) முழுதளாவிய வரையெல்லை செயற்கூறுகள்
(ஈ) உள்ளமை வரையெல்லை செயற்கூறுகள்
Which are loaded as soon as the library files are imported to the program?
(A) Built-in scope variables (D) Enclosed scope variables
(C) Global scope variables (E) Local scope variables

3. பின்வரும் எது நெறிமுறையின் பண்புக்கூறு அல்ல?
(அ) உள்ளீடு (ஆ) நிரல் (இ) எல்லையுற்றது (ஈ) எளிமை
Which of the following is not a characteristic of an algorithm?
(A) Input (B) Program (C) Finiteness (D) Simplicity

4. பைத்தானில் ஒரு நிரலை எத்தனை முறைமைகளில் எழுதலாம்?
(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து
In how many ways programs can be written in Python?
(A) Two (B) Three (C) Four (D) Five

5. பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

```
a=15
    while (a<=20):
        print(a%a, end=' ')
        i = i + 1
```

(அ) 15 16 17 18 19 20 (ஆ) 20 19 18 17 16 15
(இ) 0 0 0 0 0 0 (ஈ) 1 1 1 1 1 1

Wondershare PDFelement

What will be the output of the following Python snippet?

```
    a=15
    while (a<=20):
        print(a%a, end=' ')
        i = i + 1
```

(A) 15 16 17 18 19 20 (B) 20 19 18 17 16 15
(C) 0 0 0 0 0 0 (D) 1 1 1 1 1 1

6. பைத்தானில் ஒரு செயற்கூற்றை வரையறுக்க பயன்படும் சிறப்பு சொல் எது?
(அ) def (ஆ) local (இ) rec (ஈ) global
Which keyword to be used to define a function in Python?
(A) def (B) local (C) rec (D) global

7. பைத்தானின் எந்த கட்டளை ஒரு சர மாறியை முழுமையாக நீக்கப் பயன்படுகிறது?
(அ) rem (ஆ) remove (இ) del (ஈ) delete

Wondershare PDFelement

Which command can be used to remove entire string variable in Python?

(A) rem (B) remove (C) del (D) delete

8. பைத்தானின் எந்த கட்டளை ஒரு Listன் நீளத்தை கண்டுபிடிக்கப் பயன்படுகிறது?

(அ) for( ) (இ) range( ) (இ) len( ) (ஈ) length( )

Which function is used to find length of a list in Python?

(A) for( ) (B) range( ) (C) len( ) (D) length( )

9. பைத்தானில் இனக்குழு வழிமுறையின் முதல் அளபுரு கண்டிப்பாக எந்த அளபுருவாக இருக்க வேண்டும்?

(அ) self (ஆ) rec (இ) global (ஈ) key

In Python the class method must have which named argument as first argument?

(A) self (B) rec (C) global (D) key

10. எது ஒரு அட்டவணையில் உள்ள தொடர்புடைய தரவுகளின் முழு தொகுப்பு?

(அ) வரிசை (ஆ) பண்புக்கூறு (இ) அட்டவணை (ஈ) மென்பொருள்

Which is the entire collection of related data in one table?

(A) tuple (B) attribute (C) table (D) software

11. ஒரு தரவுத்தளத்தை முந்தைய commit நிலை வரை மீட்டெடுக்கும் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு மொழி (TCL):

(அ) Commit (ஆ) SavePoint (இ) Insert (ஈ) Rollback

The TCL command used to restores the database to the last commit state:

(A) Commit (B) SavePoint (C) Insert (D) Rollback

Wondershare PDFelement

12. பைத்தான் கோப்பு முறைமைகளில் தனித்துவமான படைப்பிற்காக கோப்பினை திறக்கும் முறை:

(அ) w (ஆ) x (இ) b (ஈ) a

The python file mode opens a file for exclusive creation:

(A) w (B) x (C) b (D) a

13. பின்வரும் பைத்தான் நிரல் கோப்பின் சரியான பெயர் எது?

(அ) pycpp.py (ஆ) pycpp.cpp (இ) pycpp.c (ஈ) pycpp.js

Which of the following is the valid Python program file name?

(A) pycpp.py (B) pycpp.cpp (C) pycpp.c (D) pycpp.js

14. தரவுத்தளத்திலுள்ள அனைத்து தரவுகளையும் பெறப் பயன்படும் SQL கூற்று:

(அ) SELECT (ஆ) CREATE (இ) DISTINCT (ஈ) ORDER BY

The statement in SQL is used to retrieve data from a table in a database:

(A) SELECT (B) CREATE (C) DISTINCT (D) ORDER BY

Wondershare PDFelement

15. பின்வரும் எது matplotlib காட்சிப்படுத்தலின் வகை அல்ல?

(அ) ஹிஸ்டோகிராம் (ஆ) வட்ட வரைபடம்

(இ) பெட்டி வரைபடம் (ஈ) SQLite

Which of the following is not a type of visualization under matplotlib?

(A) Histogram (B) Pie chart (C) Box plot (D) SQLite

## பகுதி – II / PART – II

எதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 2 = 12

Answer any six questions. Question No. 24 is compulsory.

16. இடைமுகம் மற்றும் செயல்படுத்துதல் வேறுபாடு என்ன?

What is the difference between interface and implementation?

17. அடைக்கப்பட்ட வரையெல்லை என்றால் என்ன?

What is enclosed scope?

18. பைத்தானின் சிறப்பியல்புகள் யாவை?

What are the key features of Python?

19. பைத்தானின் பல்வேறு செயற்கூறு செயலுருபுகளின் வகைகள் யாவை?

What are the different types of function arguments in Python?

Wondershare PDFelement

20. swapcase( ) என்றால் என்ன என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் எழுதுக.

What is swapcase( )? Write with an example.

21. SQLiteல் ஒரு தரவுதளத்தை உருவாக்கும் பைத்தான் நிரல் ஒன்றை எழுதுக.

Write a Python code to create a database in SQLite.

22. DBMSன் நிறைகள் யாவை?

What are the advantages of DBMS?

23. CSV கோப்பு என்றால் என்ன?

What is CSV file?

24. பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடு என்ன?

What will be the output of the following snippet?

```
set_A = {'A', 2, 4, 'D'}
set_B = {'A', 'B', 'C', 'D'}
print(set_A & set_B)
```

Wondershare
PDFelement

## பகுதி – III / PART – III

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 6 × 3 = 18

Answer any six questions. Question No. 33 is compulsory.

25. ஆக்கிகள் மற்றும் செலக்டர்கள் என்றால் என்ன?

What are constructors and selectors?

26. குமிழி வரிசையாக்க நெறிமுறைக்கான போலிக் குறிமுறை ஒன்றை எழுதுக.

Write a pseudo code for bubble sort algorithm.

27. பைத்தானின் input( ) பற்றி சிறுகுறிப்பு ஒன்றை எழுதுக.

Write a short note on input( ) in Python.

28. பைத்தானின் if…elif…else கூற்றின் தொடரிலை எழுதுக.

Write the syntax of if…elif…else statement in Python.

29. வட்ட வரைபடம் என்றால் என்ன? பைத்தானில் வட்ட வரைபடத்தை எவ்வாறு உருவாக்குவாய்? ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டு தருக.

What is pie chart? How will you create pie chart in Python? Give an example.

30. பைத்தான் Public மற்றும் Private தரவு உறுப்புகள் யாவை?

What is a Public and Private data member in Python?

Wondershare PDFelement

31. SQLன் DELETE, TRUNCATE மற்றும் DROP கட்டளைகளின் பயன் என்ன?

What is the use of DELETE, TRUNCATE and DROP commands in SQL?

32. C++க்கு மேலான பைத்தானின் பண்புக்கூறுகள் யாவை?

What are the features of Python over C++?

33. சரத்தை துண்டாக்குதல் பற்றி தொடரியல் மற்றும் எடுத்துக்காட்டுடன் சிறுகுறிப்பு எழுதுக.

Write a short note on string slicing with syntax and example.

## பகுதி – IV / PART – IV

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 × 5 = 25

Answer all the questions.

34. நெறிமுறையின் சிக்கல் பற்றி விளக்குக.

Explain about Complexity of an algorithm.

Wondershare PDFelement

(அல்லது / OR)

பைத்தான் வில்லைகளின் வகைகளை விளக்குக.

Explain about the types of tokens in Python.

35. பைத்தானின் மடக்குகளின் வகைகள் யாவை? ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.

What are the different types of loops in Python? Explain with an example.

(அல்லது / OR)

பைத்தான் மாறி வரையெல்லைகள் யாவை?

What are the scopes of variables in Python?

36. பின்வரும் உள்ளிணைந்த சர செயற்கூறுகளைப் பற்றி குறிப்பு வரைக.

(அ) capitalize( ) (ஆ) isalpha( ) (இ) isalnum( ) (ஈ) lower( )

Write the short note on the following built-in string functions.

(i) capitalize( ) (ii) isalpha( ) (iii) isalnum( ) (iv) lower( )

(OR)

Dictionary என்றால் என்ன? அதன் தொடரியல் மற்றும் List மற்றும் Dictionaryக்கு இடையிலான வேறுபாடுகளையும் எழுதுக.

What is dictionary? Write its syntax and differences between list and dictionary.

37. கொடுக்கப்பட்ட வெளியீட்டை பெறுவதற்கு பின்வரும் நிரலை திருத்தி எழுதுக.

Rewrite the following Python program to get the given output:

<u>வெளியீடு / OUTPUT:</u>

```
Enter Radius: 5
The area = 78.5
The circumference = 34.10
```

<u>நிரல் / CODE:</u>

```
Class circle( )
pi=3.14
def --init__ (self, radius):
        self=radius
DEF area(SELF):
        Return
        Circle.pi + (self.radius * 2)
Def circumference(self):
Return 2*circle.pi * self.radius
r = input("Enter radius= ")
c = circle(r)
print "The Area: ", c.area( )
printf ("The circumference=", c)
```

(அல்லது / OR)

DBMSன் பண்புக்கூறுகள் யாவை?

What are the characteristics of DBMS?

38. தரவுத்தளத்தின் பல்வேறு வகையான கட்டுப்பாடுகள் (constraints) யாவை?

What are the different types of constraints in Database?

(அல்லது / OR)

பின்வரும் பைத்தான் நிரலின் வெளியீடை வரைக.

Draw the output for the following Python code.

```
import matplotlib.pyplot as plt
a = [1,2,3]
b = [5,7,4]
x = [1,2,3]
y = [10,14,12]
plt.plot(a,b, label='Lable 1')
plt.plot(x,y, label='Lable 2')
plt.xlabel('X-Axis')
plt.ylabel('Y-Axis')
plt.legend()
plt.show()
```

****

Wondershare PDFelement

Wondershare PDFelement

மாதிரி வினாத்தாள் – 4 / Model Question Paper - 4

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## HIGHER SECONDARY – SECOND YEAR

## PART - III

## கணினி அறிவியல் / COMPUTER SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil and English Version)

(New Syllabus)

[கால அளவு: 2.30 மணி நேரம்]

[Time Allowed: 2.30 Hours] [Maximum Marks: 70]

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளாத என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions: (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

Wondershare PDFelement

### பகுதி – I / PART – I

15 × 1 = 15

குறிப்பு: (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) All questions are compulsory.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

1. செயற்கூறில் தரவு வகை குறிப்பு எழுதும்போது, பின்வரும் எந்த அடைப்புக்குறி கட்டாயமாகும்?

(அ) { } (ஆ) ( ) (இ) [ ] (ஈ) < >

Which of the following are mandatory to write the type annotations in the function definition?

(A) { } (B) ( ) (C) [ ] (D) < >

Wondershare PDFelement

2. இரு மதிப்புகளை ஒன்றாக கட்டமைத்தல் இவ்வாறு கருதப்படும்.
(அ) Pair (ஆ) Triplet (இ) single (ஈ) quadrat
Bundling two values together into one can be considered as
(A) Pair (B) Triplet (C) single (D) quadrat

3. இது நெறிமுறையின் கோட்பாட்டு செயல்திறன் பகுப்பாய்வு ஆகும்.
